# ஆகஸ்ட்– 16 – வியாழன்

## புனித ஹங்கேரி முடியப்பர்

**கடவுள் இதைக் கண்டு சினம் கொண்டார்: இஸ்ரயேலை அவர் முழுமையாகப் புறக்கணித்தார்: திபா. 78:59**

### முதல் வாசகம் : ஏசேக்கியல் 12 : 1 – 12

ஆண்டவரின் வாக்கு எனக்கு அருளப்பட்டது. "மானிடா! கலகம் செய்யும் வீட்டாரிடையே நீ வாழ்கின்றாய். காணக் கண்கள் இருந்தும் அவர்கள் காண்பதில்லை. கேட்கச் செவிகள் இருந்தும் அவர்கள் கேட்பதில்லை. ஏனெனில் அவர்கள் கலகம் செய்யும் வீட்டார்.மானிடா! நீயோ நாடுகடத்தப்படும் ஒருவர்போல் பொருள்களைத் தயார் செய்துகொண்டு, அவர்கள் கண்ணெதிரே பகல்நேரத்தில் புறப்படு. உன் உறைவிடத்திலிருந்து வேறோர் இடத்திற்கு, அவர்கள் கண்ணெதிரே, நாடுகடத்தப்படுபவர் போல் வெளியேறு. கலகம் செய்யும் வீட்டாராக இருப்பினும் ஒருவேளை அவர்கள் அதைக் கண்டுணரலாம்.நாடுகடத்தப்படும் ஒருவர்போல், அவர்கள் கண்ணெதிரே பகல்நேரத்தில் உன்பொருள்களை எடுத்துவை. மாலை வேளையில், அவர்கள் கண்ணெதிரே நாடுகடத்தப்படுபவர்போல் புறப்படு.அவர்கள் கண்முன்னே, சுவரில் துளையிட்டு அதன் வழியாய் அவற்றை வெளிக்கொணர்வாய். அவர்கள் கண்முன்னே அவற்றைத் தோள்மேல் வைத்து இருள் சூழ்ந்ததும் வெளியே தூக்கிச்செல். நிலத்தைப் பார்க்காதபடி உன் முகத்தை மூடிக்கொள். ஏனெனில், இஸ்ரயேல் வீட்டாருக்கு உன்னை ஓர் அடையாளமாக வைத்திருக்கிறேன்."எனக்குக் கட்டளையிட்டபடியே நான் செய்தேன். நாடுகடத்தப்படுகையில் கொண்டு போவதுபோல என் பொருள்களைப் பகல்வேளையில் வெளிக் கொணர்ந்தேன். மாலையில் என்கைகளால் சுவரில் துளையிட்டேன். இருள் சூழ்ந்ததும் அவற்றைத் தோளில் தூக்கிக்கொண்டு அவர்கள் கண்முன்னே வெளியேறினேன். காலையில் ஆண்டவரின் வாக்கு எனக்கு அருளப்பட்டது. "மானிடா! கலகம் செய்யும் வீடாகிய இஸ்ரயேல் வீட்டார் உன்னிடம், "நீ செய்கிறது என்ன?" என்று கேட்கவில்லையா?நீ அவர்களுக்குச்சொல் எருசலேமில் இருக்கும் மக்கள் தலைவனையும் அவனுடனிருக்கும் இஸ்ரயேல் வீட்டார் அனைவரையும் குறித்துத் தலைவராகிய ஆண்டவர் இவ்வாறு கூறுகிறார். நீசொல் உங்களுக்கு நான் ஓர் அடையாளமாய் இருக்கிறேன் நான் செய்ததுபோல் அவர்களுக்கும் செய்யப்படும். அவர்கள் நாடுகடத்தப்பட்டோராயும் சிறைப்பட்டோராயும் செல்வர்.அவர்களின் தலைவன் இருளில் தோளில் சுமையுடன் மதிலினூடே வெளியேறுவான். அவனை வெளிக்கொணர்வதற்காக மதிலைக் குடைவார்கள். கண்களால் நாட்டைப் பார்க்காதபடி அவன் தன் முகத்தை மூடிக்கொள்வான்.

**பதில்பாடல் :** இறைவனின் செயல்களை ஒருபோதும்
மறவாதிருங்கள்

### நற்செய்தி : மத்தேயு 18 : 21 –-- 19 : 1

அக்காலத்தில் பேதுரு இயேசுவை அணுகி, "ஆண்டவரே, என் சகோதரர் சகோதரிகளுள் ஒருவர் எனக்கு எதிராகப் பாவம் செய்துவந்தால் நான் எத்தனைமுறை அவரை மன்னிக்க வேண்டும்? ஏழுமுறை மட்டுமா? எனக்கேட்டார்.அதற்கு இயேசு அவரிடம் கூறியது. "ஏழுமுறை மட்டுமல்ல. எழுபது தடவை ஏழுமுறை என நான் உனக்குச் சொல்கிறேன்.விண்ணரசைப் பின்வரும் நிகழ்ச்சிக்கு ஒப்பிடலாம் ஓர் அரசர் தம்பணியாளர்களிடம் கணக்குக்கேட்க விரும்பினார்.அவர் கணக்குப் பார்க்கத் தொடங்கியபொழுது, அவரிடம் பத்தாயிரம் தாலந்து கடன்பட்ட ஒருவனைக் கொண்டுவந்தனர்.அவன் பணத்தைத் திருப்பிக் கொடுக்க இயலாத நிலையில் இருந்தான். தலைவரோ, அவனையும் அவன் மனைவி மக்களோடு அவனுக்குரிய உடைமைகள் யாவற்றையும் விற்றுப்பணத்தைத் திருப்பி அடைக்க ஆணையிட்டார்.உடனே அப்பணியாள் அவர் காலில் விழுந்து பணிந்து, "என்னைப் பொறுத்தருள்க் எல்லாவற்றையும் உமக்குத் திருப்பித் தந்துவிடுகிறேன்" என்றான். அப்பணியாளின் தலைவர் பரிவுகொண்டு அவனை விடுவித்து அவனது கடன் முழுவதையும் தள்ளுபடிசெய்தார்.ஆனால் அப்பணியாள் வெளியே சென்றதும், தன்னிடம் நூறு தெனாரியம் கடன்பட்டிருந்த உடன் பணியாளர் ஒருவரைக் கண்டு, "நீ பட்ட கடனைத் திருப்பித் தா" எனக்கூறி அவரைப் பிடித்துக் கழுத்தை நெரித்தான்.உடனே அவனுடைய உடன் பணியாளர் காலில் விழுந்து, என்னைப் பொறுத்தருள்க. நான் திருப்பிக் கொடுத்துவிடுகிறேன்" என்று அவனைக் கெஞ்சிக்கேட்டார்.ஆனால் அவன் அதற்கு இசையாது, கடனைத் திருப்பி அடைக்கும்வரை அவரைச் சிறையிலடைத்தான். அவருடைய உடன் பணியாளர்கள் நடந்ததைக் கண்டபோது மிகவும் வருந்தித் தலைவரிடம் போய் நடந்தவற்றையெல்லாம் விளக்கிக் கூறினார்கள்.அப்போது தலைவர் அவனை வரவழைத்து, "பொல்லாதவனே, நீ என்னை வேண்டிக் கொண்டதால் அந்தக்கடன் முழுவதையும் உனக்குத் தள்ளுபடி செய்தேன்.நான் உனக்கு இரக்கம் காட்டியதுபோல நீயும் உன் உடன்பணியாளருக்கு இரக்கம் காட்டியிருக்க வேண்டும் அல்லவா? என்று கேட்டார்.அத்தலைவர் சினங் கொண்டவராய், அனைத்துக் கடனையும் அவன் அடைக்கும்வரை அவனை வதைப்போரிடம் ஒப்படைத்தார்.உங்களுள் ஒவ்வொருவரும் தம் சகோதரர் சகோதரிகளை மனமார மன்னிக்காவிட்டால் விண்ணுலகில் இருக்கும் என் தந்தையும் உங்களை மன்னிக்கமாட்டார்.இயேசு இவ்வாறு உரையாற்றி முடித்த பின்பு கலிலேயாவை விட்டு அகன்று யோர்தானுக்கு அப்பாலுள்ள யூதேயப் பகுதிகளுக்குச் சென்றார்.

**தியானம்:** எமது பரலோகம் தகப்பன் பரிசுத்தத்தில் நிறைவுள்ளவராக இருப்பதனால் அவரது பரிவும், இரக்கம் நிறைந்த மன்னிப்பும் எக்காலத்திலும் மாறாதது என்பதனை நற்செய்தி எமக்குப் படிப்பிக்கின்றது. ஆனால், நாமோ நற்செய்தியில் (மத்தேயு 18:21---19:1)கூறப்பட்ட பணியாளர் போன்றே எமது அதிகாரத்தால் அடுத்தவரைப் பழிவாங்கும் மனப்பாங்கோடேயே வாழ்கின்றோம். இதற்கு கடந்த காலங்களில் எமது நாட்டில் இடம்பெற்ற படுகொலைகளை நாம் உதாரணமாகக் கொள்ளலாம். ஆயினும், ஆண்டவர் இயேசு"ஏழு முறை மட்டுமல்ல, எழுபது தடவை ஏழுமுறை" மன்னிக்கவேண்டும் எனக்கூறியதாக நற்செய்தி தெரிவிப்பதனால் எம்மை வேறுவிதமாகச் சிந்திக்கத் தூண்டுகின்றது. நற்செய்தியில் (மத்தேயு 18:21---19:1)மன்னித்தல் தொடர்பாக ஆண்டவர் இயேசு கூறுகின்ற உவமையில் எமக்கு ஏற்படும் திடீர்க்கோப செயற்பாடுகளுக்கும், அதனால் எமது இதயத்தில் ஏற்படக்கூடிய உணர்வுகளுக்கும் இடையே உள்ள தொடர்பைத் தெளிவாக விளக்குகின்றது. ஆயினும், நற்செய்தியில் (மத்தேயு 18:21---19:1) கூறப்படும் பணியாளன் தனது எசமானனிடம் தான்பட்ட கடன் தீர்க்கப்பட்டதால் மகிழ்வடைந்து விடுதலை பெற்றிருந்தாலும், அவனது எசமானிடம் காணப்பட்ட இரக்கமும், தயாளமும் நிறைந்த உயர்ந்த பண்பான மன்னிக்கும் தன்மையை அவனது மதியீனத்தால் இனம்காணத் தவறிவிட்டான். அவ்வாறே நாமும்,"எமது பாவங்களைப் பொறுளுத்தருளும்" என்று தினமும் வழிபாடுகள், வேண்டுதல்கள் செய்கின்றோம். ஆனால், அடுத்தகணமே கிறிஸ்தவர்கள் என்ற உண்மையை, எமது பாவங்களை ஆண்டவர் இயேசு மன்னித்துள்ளார் என்பதைப் புறம்பே தள்ளிவிட்டு இறுமாப்பாக வீரம்பேசுகின்றோம். நற்செய்தியில் கூறப்பட்டது போல, அடுத்தவரின் தூசியை சுட்டிக்காட்டுவதனை விடுத்து எமது கண்ணிலுள்ள மரக்கட்டையை உற்றுநோக்குவோம். எம்மை நாமே ஆராய்ந்து பார்ப்போம். எமது பாவங்களை மன்னித்து, மறந்துவாழும் இரக்கமுள்ள ஆண்டவரிடம் நாமும் அடுத்தவரை மன்னிப்பது மட்டுமல்ல, அடுத்தவரை சகமனிதர்களாக மதித்து ஏற்றுவாழும் மனோபாங்கையும் எமக்கருளுமாறு வரம்வேண்டுவோம். அப்படி வாழுவோமாயின் நாமும் புதுவாழ்வு பெற்றவர்களாக மாற்றமடைவோம்.